Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 178/2019        PW-2**

Name : சுகுணா
Father / Husband name : குப்பன்
Village : நொளம்பூர்
Age : 32

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 28.07.2025

Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. அ.சா.1 விஜயக்குமார் என்பவரை தெரியாது. சாட்சிகள் கிருஷ்ணதேவி, முனியம்மாள், பூங்கொடி, புஷ்பா, செல்வி, ரவி ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 13.05.2017 அன்று அதிகாலை 4 மணிக்கு 6109 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிறப்பேருந்தில் கிருஷ்ணதேவி, முனியம்மாள், பூங்கொடி, புஷ்பா, செல்வி ஆகியோர்கள் சென்றபோது சலவாதி அருகே பேருந்து வேகமாக திரும்பியபோது பின்னால் வந்த லாரி மோதியது. அதில் எங்களுக்கு அடிப்பட்டது. கௌசல்யா என்பவருக்கு பலத்தக்காயம் ஏற்பட்டது. அடிப்பட்டவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். எனக்கு இடுப்பில் அடிப்பட்டது. அன்றையதினமே சிகிச்சை எடுத்துக்கொண்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். நாங்கள் சென்ற பேருந்தை ஓட்டி வந்த நபரின் பெயர் சக்திவேல். அவர் ஆஜர் எதிரி என நினைக்கிறேன், சரிவர நினைவில்லை. வழக்கு சம்மந்தமாக யார் புகார் கொடுத்தார் என்று தெரியாது. போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அடிப்பட்டது சம்மந்தமாக நான், முனியம்மாள் காவல் நிலையத்தில் புகார்

கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் சென்றது கம்பெனி பேருந்து என்றால் சரிதான். நான் எங்கு ஏறினேன் என்றால் நானும் முனியம்மாள் என்பவரும் நொளம்பூரில் ஏறினோம். நாங்கள் சென்ற பேருந்திற்கு லாரி மோதி எந்த பக்கம் சேதம் ஏற்பட்டது என்றால் சலவாதி அருகே பேருந்து திரும்பும்போது பேருந்தின் பின்புறம் வலது புறத்தில் லாரி மோதியது. எந்த வாகனமும் திரும்பும்போது மெதுவாக தான் திரும்பும் என்றால் சரிதான். பேருந்தும் திருப்பத்தில் மெதுவாக சென்றது என்றால் நான் கவனிக்கவில்லை, அந்தயிடத்தில் கௌசல்யாவை ஏற்றிக்கொண்டு சென்றது. நான் வேலை செய்வது சிங்கப்பெருமாள்கோவிலுக்கு அடுத்துள்ள டிரயம் கம்பெனி ஆகும். பின்னால் வந்த லாரி வேகமாக வந்ததா என்றால் தெரியாது.

2. லாரி பேருந்தில் மோதிய பிறகு சலவாதி பேருந்து நிறுத்தம் அருகே மோதி நின்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. லாரி மோதி நின்றதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் லாரி ஓட்டுநர் வேகமாக வந்து மோதியது தான் என்றால் தெரியாது. அடிப்பட்ட நாங்கள் புகார் கொடுக்காததால் லாரியின் ஓட்டுநரிடம் புகாரை பெற்றுக்கொண்டு தவறாக எதிரியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் நான் மருத்துவமனையில் இருக்கும்போது விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் பேருந்து அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று லாரியின் மீது மோதியதாக சொன்னேனா என்றால் நினைவில்லை. போலிசார் காயம் பற்றி மட்டும் விசாரித்தார்கள் என்றால் சரியல்ல, காயம் மற்றும் விபத்து பற்றி விசாரித்தார்கள்.

3. பேருந்தில் எத்தனையாவது சீட்டில் அமர்ந்திருந்தேன் என்றால் பின்னாலிருந்து 3 அல்லது 4 வது சீட்டில் அமர்ந்திருந்தேன். விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, லாரி வந்து மோதியது

போது தான் விபத்து பற்றி தெரியவந்தது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 178/2019 PW-3**

Name : கிருஷ்ணதேவி
Father / Husband name : கோதையான்
Village : மேல்பாக்கம்
Age : 29
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 28.07.2025

Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. அ.சா.1 விஜயக்குமார் என்பவரை தெரியாது. அ.சா.2 ஐ தெரியும். சாட்சிகள் முனியம்மாள், பூங்கொடி, புஷ்பா, செல்வி, ரவிக்குமார் ஆகியோர்களை எனக்கு தெரியும். 13.05.2017 அன்று காலை 5 மணியளவில் நானும் முனியம்மாள், பூங்கொடி, புஷ்பா, செல்வி, ரவிக்குமார், அ.சா.2 ஆகியோர் பேருந்தில் வேலைக்கு சென்றுகொண்டிருந்தபோது சலவாதி அருகே திருப்பத்தில் திடீரென சத்தம் கேட்டது. லாரியா பஸ்சா என்று தெரியவில்லை. அது மோதி எங்கள் பேருந்திற்கு விபத்து ஏற்பட்டது. பேருந்தில் உள்ளவர்களுக்கு காயம் ஏற்பட்டது அதில் நான் சகுணா, கௌசல்யா, முனியம்மாள் ஆகியோர்கள் சிகிச்சைக்காக ஜிப்மர் மருத்துவமனைக்கு சென்றோம். எனக்கு மண்ணீரல் கிழிந்து இரத்தம் வெளியில் வந்தததாக கூறி செங்கல்பட்டு தனியார் மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சையிலிருந்தேன். இரண்டு மாதம் கழித்து கௌசல்யா இறந்ததாக கேள்விபட்டேன். நாங்கள் சென்ற பேருந்தை ஓட்டி வந்த நபரின் பெயர் நினைவில்லை. ஆஜர் எதிரி பேருந்தை ஓட்டி வந்த நபர் ஆவார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எங்கு பேருந்து ஏறினேன் என்றால் ஏப்பாக்கத்தில் ஏறினேன். மேற்படி

விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எத்தனை மணிக்கு பேருந்தில் ஏறினேன் என்றால் அதிகாலை 04.45 மணிக்கு ஏறினேன். பேருந்தில் 10, 15 நபர்கள் இருந்தாார்கள், அதிகாலை நேரம் என்பதால் தூங்கிக்கொண்டிருந்தார்கள், சத்தம் கேட்டு தான் அனைவரும் எழுந்தார்கள் என்றால் சரிதான். விபத்து எப்படி ஏற்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.